**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.91/2023**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சரவணப்பாண்டியன்)**
**22.04.2025**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் கீழக்குறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தாயார் வசந்தாவும் அதே கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. வாதியின் சிறப்பு அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் எனது தாத்தா ராமசாமிக்கு எவ்வாறு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. 1ஆம் பிரதிவாதி கருப்பையாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அம்மாவிற்கும் அவரை தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணம் பெற்ற பிறகு 1ஆம் பிரதிவாதி பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை.

4. தாவா சொத்தை பொறுத்து 1ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா எண் 1659ஆம் எண்ணில் எவ்வாறு பட்டா ஏற்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அது 1ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட நிலவுடைமை மேம்பாட்டு திட்ட பட்டா என்றால் வழக்கிற்கு பிறகு தெரிந்துகொண்டேன்.

5. எனது தாத்தாவிற்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே தாவா சொத்து சம்மந்தமாக பரிவர்த்தனைகள் ஏற்பட்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எவ்வித பரிவர்த்தனையும் இல்லை என்று எனது தாயார் சொன்னார்.

**1ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.